# செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி :5
தொகுதி :97
மே 2003

திருவள்ளுவர் ஆண்டு 2034



ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.என்.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திருமதி. கிரிஜா பிரியதர்சினி எம்.ஏ.,பிஎச்.டி.,டிப்.லிட்.,பி.ஜி.டிப்., ஜர்னலிசம் | உறுப்பினர் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி :5
தொகுதி :97
மே 2003

திருவள்ளுவர் ஆண்டு 2034


வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 154

பாண்டித்துரைத்தேவர்
புலவர்களின் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் 156

தொல்காப்பியத்தில் எச்சங்கள் 158
பேரறிஞர் நா.பாலுசாமி

தமிழிலக்கிய வரலாற்றுச் சிந்தனை 166
தமிழண்ணல்

திருவெம்பாவை – 12 174
பேராசிரியர் சுப.அண்ணாமலை

தமிழின் பழமை 178
பெரும்புலவர் திரு. திருநாராயணய்யங்கார்



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

# இதழ்மணம்

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் அபிதான சிந்தாமணி ஆசிரியர் ஆ.சிங்காரவேலு முதலியார் அவர்கள் அரிய நூலை எழுதி பின்பு அதனை அச்சிட முடியாமல் அவலமுற்ற நிலையில் கையெழுத்துப் பிரதியைப்புற்றில் இடும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அறிவாளிகளைப் போற்றிப் பேணும் மன எழுச்சியற்ற நிலையில் செல்வர்களும் கற்றவர்களும் வாழ்ந்த நாட்கள் அவை. அக்காலக் கட்டத்தில் தமிழ்வள்ளல் பாண்டித்துரைத்தேவர் வழிவழி கல்வியில் சிறந்த குடிப்பெருமை உடையவராகையினால் கல்வியையும் கல்வியாளர்களையும் பேணிப்போற்றும் காவலராக விளங்கினார். அப்பெரியார் அபிதான சிந்தாமணி ஆசிரியரைச் சந்தித்ததையும் அவர்தம் தமிழ் நெஞ்சத்தையும் ஆசிரியர் தம்முன்னுரையில் நன்றி அறிதலுடன் வெளியிடுகிறார். அதன்கண் தமிழ்வள்ளல் பாண்டித்துரைத்தேவரின் அருஞ்செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற்போகார் எனக்குறிப்பிடுகிறார். பாண்டித்துரைத்தேவர் எளிமையும் இன்சொல்லும் உடையவர். அவர் தமிழ்ப்புலவர்களுடன் நயம்பட வாழ்ந்த வாழ்வு ஆசிரியருடைய முன்னுரையில் சொல்லோவியமாகக் காட்சிதருகிறது.

அடுத்துப் பேராசிரியர் நா.பாலுசாமி அவர்கள் "தொல்காப்பியத்தில் எச்சங்கள்" என்னும் தலைப்பில் பண்டை உரையாசிரியர்கள் உரை வேறுபாட்டைச் சுட்டி அது தொடர்பாக நம்காலத்து வாழ்ந்த பெரும் பேராசிரியர்கள் ஆ.பூவராகம்பிள்ளை, பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் ஆகியோர் கருத்துக்களையும் ஒருசேர எடுத்துரைத்து கற்போர் சிந்தனைக்கு விருந்தளிக்கிறார்.

பேராசிரியர் தமிழண்ணல் "இலக்கிய வரலாற்றுச் சிந்தனை" என்னும் தலைப்பில் தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை எடுத்துரைத்து காலந்தோறும் இலக்கிய ஆசிரியர்கள் தமிழ்க்காப்பு முயற்சி மேற்கொண்டுள்ளதையும் நுண்ணிதின் ஆராய்ந்துள்ளார். களப்பிரர், பல்லவர்காலத்தில் தமிழ்மூல

நூல்கள் அழிக்கப்பட்டு எல்லாம் வடமொழியிலிருந்து வந்தவை போலக் காட்டப்பட்டன. வடமொழிப் பெயர்ப்படுத்தல், வடமொழிக்கலைச்சொற்படுத்தல், வடமொழி மூலப்படுத்தல், வடமொழி வண்ணப்படுத்தல் என வடமொழி மயமாக்கப்பட்டன. ஊர்ப்பெயர், இறைவன் இறைவிபெயர் மக்கட்பெயர் எல்லாம் மாற்றுருவம் பெற்றன. என்ற உண்மை ஆழ்ந்த பொருளுடையது. மொழிவழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபொழுது தமிழ் மக்கள் வாழ்ந்த சித்தூர் மாவட்டம் தெலுங்கு நாட்டுடன் சேர்க்கும் முயற்சி நடந்தபோது சித்தூர் தெருக்களின் தமிழ்ப்பலகைகள் நீக்கப்பட்டு தெலுங்கு மயமாக்கப்பட்டதும் ஈண்டு நினைவுகொள்ளத்தக்கது.

அடுத்துப் பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் திருவெம்பாவை பன்னிரண்டாம் பாடலுக்கு எழுதியுள்ள உரை ஆழ்ந்த அனுபவமுதிர்ச்சியின் வெளிப்பாடு. “வளை சிலம்ப” என்பது நாதம் முதலிய தத்துவங்களின் மடைமாற்றம். வார்கலைகள் ஆர்ப்பரவம் செய்ய என்பது கலாதத்துவம் முதலிய வித்தியாதத்துவங்களின் மடைமாற்றம் “அணிகுழல்மேல் வண்டார்ப்ப” என்பது பிரகிருதி தத்துவத்தின் மடைமாற்றம் என விளக்குகின்றார். நல்லாசிரியர்பால் பலகால் கற்கவேண்டிய செய்திகளைப் பேராசிரியர் சின்மென் மொழியால் சுருங்க உரைக்கின்றார். நுட்பம் தேர்க.

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்பு 1931ல் பெரும்புலவர் திரு.திருநாரணய்யங்கார் அவர்கள் தமிழின் பழமை என்ற தலைப்பில் நம் செந்தமிழ் இதழில் எழுதியுள்ள கட்டுரை இன்றும் மொழிநூல் அறிஞர்களுக்கு விருந்தாகும். அறிவியல் நோக்கில் தமிழின் பழமையை உணர்த்திஇருப்பது கற்றோர்க்கு இன்பம் பயப்பதாகும்.

வழக்கம்போலச் செந்தமிழ் இதழைத் தமிழ் ஆர்வலர்கைகளில் சேர்ப்பதற்கு சந்தா சேர்க்கும் பணியில் அன்பர்கள் முனைப்புடன் செயல்பட அன்புடன் வேண்டுகின்றேன்.

*பதிப்பாசிரியர்*

# பாண்டித்துரைத்தேவர்
# புலவர்களின் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல்

ஆ.சிங்காரவேலு முதலியரின் அபிதானசிந்தாமணி முதற்பதிப்பின் முகவுரை

நானிந்த அபிதான சிந்தாமணி யென்ற நூலைச் சற்றேறக்குறைய 1890-ம் வருஷங்களுக்குமுன் தொடங்கினேன். இது காரணமாக நான் ஒருவனே பலர்கூடிச் செய்யவேண்டிய இதனை "கலேகபோதநியாயமாக" பல விடங்களிற் சென்று பல அரிய கதைகளைப் பல புராண, இதிஹாஸ, ஸ்மிருத, ஸ்தல புராணங்களிலும், மற்றுமுள்ள நூல்களிலுமுள்ள விஷயங்களையும், உலச வழக்குகளையும் அவற்றினுட் கருத்துக்களையும் தழுவியதாகும்.

இதிலடங்கியவை: வேதப்பொருள் விளக்கம், பல மஹா புராணக் கதைகள், ஸ்தலபுராணக் கதைகள், பாரதாதி இதிஹாசங்கள், ஸ்மிருதி விஷயங்கள் பலநாட்டுச் சமைய நிச்சயங்கள், பலஜாதி விஷயங்கள், பரதம், இரத்தினோற்பத்தி சரிதைகள், பல வித்வான்களின் சரிதைகள், சிவாலய விஷ்ணு மான்மியங்கள், சூர்ய சந்திர ராக்ஷச இருடிகளின் பரம்பரைகள், சைவ வைஷ்ணவ மாத்வ ஸ்மார்த்த சமயவரலாறுகள், சைவாதீன பண்டார சந்நதிகளின் மடங்கள், இந்துதேசம் ஆண்ட புராதன அரசர் வரலாறுகள் முதலிய பல விஷயங்கள்.

இந்நூல் இற்றைக்கு (131) பாரங்களுக்குமேல் இராயல் எட்டுப்பக்கங்கள் கொண்ட உருவத்தில் சற்றேறக்குறைய லெட் இல்லாமல் (1050) பங்கங்கள் ஸ்மால் பைகாவில் முடிந்தது.

இந்நூல் இவ்வாறு ஒருவாறு முற்றுப் பெற்றபின் இதனைச் சென்னையிலிருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். அவர்கள் இத்தகைய நூல் தமிழிற் கின்றியமையாததே: அதனை வெளியிடுக என்றனரேயன்றி யதனை யச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.

அதற்குப்பின்னிதனைச் சென்னை கிறூரேடரும் பச்சையப்பன் கல்விச்சாலைத் தரும விசாரணையின் எடிகேஷணல் டிரஸ்டியுமாகிய பிரம்மஸ்ரீ வ.கிருஷ்ணமாசாரியரிடம் காட்டினேன். அவர் பல அச்சாபிசுக்காரர்களிடம் காட்டி செலவு அதிகம் பிடிக்கும் எனக் கூறிவிடுத்தனர்.

இச்சோர்வால் எனக்கு அக்கார்யத்தில் ஊக்கஞ்செல்லாது நூலைப் புற்றிடுவோமா என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனையொத்த சிறு நூல்களியற்றினர். அதனைக்கண்டும் திருவுளப்பாங் கென்றிருந்தேன். இது நிற்க, நான் வழிபடு கடவுளாகிய மலைமகணாயகர் உள்ளக் குறிப்போ அல்லது நான் முதன்முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ அல்லது இரண்டாமுறை வெளிப்படுத்திய அறிக்கையோ மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பிரசிடெண்டும் பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும், தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமி தேவரவர்களின் திருக்குமாரரும், என் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் போல்பவருமாகிய ஸ்ரீமான் பொ.பாண்டித்துரைசாமித் தேவரவர்களின் கைப்பட்டுத் தானே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து அதனை மதுரைத் தமிழ்ச்சங்க அச்சுயந்திரசாலையில் அச்சிடுவான் எண்ணி என்னிடமிருந்த பிரதிகளைத் தாமே மதுரைக்கு எடுத்துச்சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரைக்கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சுயந்திரசாலையில் என் முன்னிலையில் அச்சிட வுத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்து வந்தனர். அவர்கள் அருஞ்செயலை இப்புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்.

இந்நூல் ஒருதனி நூலன்று, இது பல சான்றோரியற்றிய நூல்களின் தொகுப்பாம். இதனை எழுதுமிடத்து எனக்குச் சென்னை பிரசிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதரும், மஹாமஹோபாத்யாயருமாகிய பிரம்மஸ்ரீ வெ.சாமிநாத ஐயரவர்கள் வெளிப்படுத்திய சங்கச் செய்யுட்கள் எனக்குதவிய வாதலால் அவர்களுக்கும், மதுரைச் செந்தமிழ் வாயிலாக வெளிவந்த பல அரிய விஷயங்கள் எனக்கு உதவியவாகையால் அப்பத்திராசியருக்கும். எனக்குச் சமண தீர்த்தங்கரரின் சரிதைகளைத் தம் வேலைவிட்டு அருகிருந்து விளக்கிய வீடூர் வித்வான் ம-ள-ள-ஸ்ரீ. அப்பாசாமி நயினாருக்கும். நான் பன்முறை வந்தனம் புரியக் கடமைப்பட்டவனாகிறேன். இந்நூல் என்னை எழுதும்வகைத் தூண்டியென்முயற்சியிலாது அதனை முற்றுறச் செய்வித்த முக்கண்மூர்த்தி மூவர்முதல்வன் செக்கர்மேனிச் சிவனடி யென்றும் பாசி படர்ந்த குட்ட நிகர்த்த ஆகடை மனத்து அமர்ந்து வாழ்க.

# தொல்காப்பியத்தில் எச்சங்கள்

பேரறிஞர் நா.பாலுசாமி

தொல்காப்பியர் எச்சவியல் என்னும் பகுதியில் எச்சச் சொற்களின் வகைகளையும் அவற்றின் பாகுபாடுகளையும் விரிவாகக் கூறியுள்ளார். இலக்கண நூலார் சொற்களை முற்று என்றும் எச்சம் என்றும் இருவகைப்படுத்துவர். பொருள் முடிந்து நிற்பது முற்று; எஞ்சி நிற்பது எச்சம். (எ.டு.) வந்தான் - முற்று; வந்து - எச்சம். எச்சச்சொல் பிறிதொரு சொல் கொண்டு முடியும். முற்று தணித்துப் பொருள் தரும் பின்வரும் எச்சவியல் நூற்பா எச்சங்கள் பத்து வகையே என்பதனை உணர்த்தும்..

"பிரிநிலை வினையே பெயரே ஒழியிசை
எதிர்மறை உம்மை எனவே சொல்லே
குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சு பொருட் கிளவி" (எச் - 34)

நன்னூலாரும்,

"பெயர்வினை உம்மை சொல் பிரிப்பு என ஒழியிசை
எதிர்மறை இசையெனும் சொல்லொழிபு ஒன்பதும்
குறிப்பும் தத்தம் எச்சம் கொள்ளும்"

என்று பத்துவகை எச்சங்களைக் குறிப்பிடுகிறார்.

இங்குக் கூறிய பத்து வகை எச்சங்களுள் சொல்லெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் ஆகிய மூன்றும் ஒழிந்த, ஏனைய ஏழும் தாமல்லாத பிற சொற்களைக் கொண்டு முடிக்கும் சொற்களாகப் பெற்றே முடியும்; இம் மூன்றும் பிற சொற்களைக் கொண்டு முடிக்கும் சொற்களாகப் பெறா இதனை,

"எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கும்
எஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப"

என்ற நூற்பாவும்,

"அவை தாம்.
தத்தம் குறிப்பின் எச்சம் செப்பும்"

என்ற நூற்பாவும் நன்கு புலப்படுத்தும். எஞ்சிய மூன்று என்ற தொடர், சொல், இசை, குறிப்பு ஆகிய மூன்று எச்சங்களைக் குறிக்கும்; எஞ்சு பொருட் கிளவி என்ற தொடர் கொண்டு முடிக்கும் சொற்களைக் குறிக்கும்.

மேற்கூறிய எச்சங்கள் தொல்காப்பிய உரைகாரர்களாகிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் போன்றோரால் வெவ்வேறு வகையாக உரை காணப் பெற்றுள்ளன. தெய்வச் சிலையார் பிற உரைகாரர்களினும் முற்றிலும் வேறுபட்டுள்ளார். இனிப் பரிமேலழகர், சிவஞானமுனிவர் போன்றோர் தத்தம் உரைகளில் இவற்றிற்கு மாறுபட்ட உரைகளைத் தந்துள்ளனர். குறிப்பாகச் சொல்லெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் இம் மூன்று வகை எச்சங்களைப் பற்றிய உரை விளக்கங்கள் பெரும் மாறுபாடுகளைப் பெற்றுள்ளன. இக் கட்டுரையின் நோக்கம் அவ்வுரை வேறுபாடுகளை ஆராய்ந்து நேரிய விளக்கம் எதுவாக இருக்க முடியும் என்பதனைப் புலப்படுத்தலேயாம்.

**சொல்லெச்சம்:-**

> "சொல்லென் எச்சம் முன்னும் பின்னும்
> சொல்லள வல்லது எஞ்சுதல் இலவே"

என்பது தொல்காப்பிய எச்சவியல் நூற்பா (எச். 45)

(1) "சொல்லெனெச்சம் முன்னாயினும் பின்னாயினும் 'சொல்' என்னும் சொற்கொண்டு முடிதலல்லது பிறிதில்லை என்றவாறு" என்பது இளம்பூரணம்.

வரலாறு: 'பசித்தேன் பழஞ்சோறு தா என நின்றான்' "தா எனச் சொல்லி நின்றான்" என்று விரித்துப் பொருள் கொள்ளல் வேண்டும், 'என' என்பதனை எனச் சொல்லி என்று விரிப்பர் இளம்பூரணர். ஈண்டுச் 'சொல்லி' என்றும் சொல் சொல்லெச்சம் என்பது இவ்வுரைகாரர் கருத்து'

(2) "சொல்லெச்சம் ஒரு சொற்கு முன்னும் பின்னும் சொல் மாத்திரம் எஞ்சுவதல்லது, தொடராய் எஞ்சுதலின்று", என்பது சேனாவரையம் 'உயர்திணை என்மனார்' என்புழி 'ஆசிரியர்'

என்னும் சொல் முன்னும், மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே' (குறுந் 71) என்புழி 'எமக்கு' என்னும் சொல் பின்னும் எஞ்சி நின்றவாறு கண்டுகொள்க" என்று எடுத்துக்காட்டுக் கூறி விளக்குவர் சேனாவரையர். இவர் இளம்பூரணர் உரையை மறுத்துரைப்பாராயினர்.

சேனாவரையர், செய்யுளில் பொருள் கொள்ளுமிடத்துப் பொருத்தமான ஒரு சொல்லை மாத்திரம் வருவித்துரைப்பதே சொல்லெச்சம் என்பர். இவர் கருத்தினைப் பரிமேலழகரும் சிவஞான முனிவரும் உடன்படுகின்றனர். பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார் என்ற கடவுள் வாழ்த்துப் குறட்பாவிற்கு உரை காணுங்கால் பரிமேலழகர் 'சேர்ந்தார்' என்ற ஒரு சொல்லை வருவித்துச் சேர்ந்தார் நீந்துவர்' எனப் பொருள் காண்பர். ஈண்டுச் சேர்ந்தார்' 'என்பது சொல்லெச்சம் என்பர் இவர், இனிச் சிவஞான முனிவரும் சேனாவரையர், பரிமேலழகர் ஆகிய இருவர் கருத்துக்கும் உடன்படுவாராய்,

'விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண் மூக்கு
அளந்தறிந்து அறியா ஆங்கவை போல'

என்னும் சிவஞான போதம் ஐந்தாம் சூத்திர அடிகளுக்கு உரைகாணுங்கால், ஐம்பொறிகளுள் விடுபட்ட 'செவி' என்பதனைச் சொல்லெச்சம் எனச் சுட்டியுள்ளார், பரிமேலழகர், சேனாவரையர் ஆகியோர் உரைகாணும்போது ஏற்புடைய ஒரு சொல்லை வருவித்தலே சொல்லெச்சம் என்று கூறியிருப்பச் சிவஞான முனிவர் செய்யுள் மூலத்திலேயே விடுபட்டதனைக் கொண்டு கூட்டிச் சொல்லெச்சம் என்றமை சிந்திக்கத்தக்கது. 'செவி' என்பதனைச் சொல்லெச்சம் என்பதினும் உபலட்சணம்' எனக் கொள்ளுதலே நேரிது எனத் தோன்றுகிறது.

இவ்வாறு உடன்படும் முனிவர், நன்னூல் விருத்தியுரையுள் (நன். துத் 360) தொல்காப்பியச் சூத்திரத்தை எடுத்துக்காட்டி, 'சொல்லெச்சம்' என்பது சொல்விகற்பங்களின்றிச் 'சொல்' என்னும் சொல் எஞ்சி நிற்பது' என்று விளக்கம் தருகிறார். மேலும் 'மிடியென்னும் காரணத்தின் மேன்முறைக்கண்ணே - கடியென்றார் கற்றறிந்தார்' என்பதனையும், இசையா ஒரு

பொருள் இல்லென்றல் யார்க்கும் வசையன்று' என்பதனையும் எடுத்துக்காட்டி (நாலடியார்), கடி என்று சொன்னார், இல் என்று சொல்லுதல் எனச் சொல்லென்னும் தம்மெச்சம் கொண்டன என்று விளக்கியுள்ளார். இதனை நோக்க முனிவர் இளம்பூரணரை உடன்படுகிறார் என்பது தெளிவு,

இனி நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம் கூர்ந்து கவனிக்கத்தகும். இவர் சேனாவரையர், இளம்பூரணர் ஆகிய இருவர் உரைகளையும் மறுக்கிறார். இளம்பூரணர் காட்டும், 'தாவென நின்றான்' என்ற தொடருக்குத் தாவென்று சொல்லி நின்றான் எனப் பொருள் கொண்டு, 'சொல்லி' என்னும் சொல்லைச் சொல்லெச்சம் எனக்கொள்வது தவறு என மறுக்கிறார். மாறாக, எழுத்தெனப் படுப, பெயரெனப்படுப, கடியென் கிளவி, தேன் என் கிளவி முதலிய எடுத்துக்காட்டுகளைச் சொல்லெச்சம் என்பர் நச்சினார்க்கினியர், எனப்படுப, என் கிளவி, 'ஆகியவற்றுக் குள்ளேயே' சொல்ல' என்பது அடங்கி நின்று பொருள் தருதலின் அதனைச் சொல்லெச்சம் என்பாராயினர். இவரது விளக்கம் சூத்திரத்தோடு பெரிதும் பொருந்துவதாக உள்ளது எனக் கொள்ளலாம்.

இனி தெய்வச் சிலையார், மேலே காட்டிய உரைகளுக்கு முற்றிலும் மாறாக 'நெடும் புனலுள் வெல்லும் முதலை.. என்ற குறட்பாவை எடுத்துக்காட்டி, 'தமது நிலத்தில் எளியாரும் வலியராவர், பிறர் நிலத்தில் வலியாரும் எளியராவர் என்னும் பொருண்மை இச் சொற்றானே உணர்த்தலிற் சொல்லெச்ச மாயிற்று' என்று விளக்கம் தந்துள்ளார். இது பிறிதுமொழிதல் அணியின்பாற் படுமேயன்றிச் சொல்லெச்சம் ஆகாமை வெளிப்படை.

இதுகாறும் கூறியவற்றால் சொல்லெச்சம்,

1. 'சொல்' என்னும் சொல் எஞ்சி நிற்பது - என்றும் (இளம்பூரணர்)

2. பாட்டுக்குப் பொருள் காணும் போது இடத்திற்கேற்பப் பொருத்தமான ஒரு சொல்லை வருவித்துக்கொள்வது - என்றும் (சேனாவரையர், பரிமேலழகர்)

3. 'சொல்' என்னும் சொல்லோ பிற சொல்லோ எஞ்சாமல், எழுத்தெனப்படுவ' என்ற விடத்து அத்தொடரிலேயே' 'சொல்ல' என்பது அடங்கி நிற்பது சொல்லெச்சம் என்றும் - (நச்சினார்க்கினியர்)

புலவாறு உரை விளக்கங்கள் அமைந்துள்ளமை புலனாகும். இக்கூறிய உரைகளை நுணுகி ஆராயின் நச்சினார்க்கினியரது உரைக்குறிப்பே சொல்லெச்சத்தின் இயல்பினை ஆசிரியர் தொல்காப்பியர் சூத்திரங்களின் கருத்துக்கு ஏற்ப அமைந்துள்ளது எனலாம்.

## இசையெச்சம்:

இளம்பூரணர், 'ஒல்லென ஒலித்தது' என்னும் தொடரை எடுத்துக்காட்டி இசையெச்சம் என்பர், 'ஒல்' என்பது ஒலிக்குறிப்பேயன்றி இசையெச்சம் ஆகாது என்க.

சேனாவரையர், 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு' என்னும் குறட்பாவைக் காட்டி 'அதுபோல' என்னும் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களை வருவித்துக் கொள்வது இசையெச்சம் என்பர். இதனை எடுத்துக்காட்டு உவமையணி என்பர் பரிமேலழகர் சொல்லெச்சம் ஒரு சொல் எஞ்சி நிற்பது என்றும் இசையெச்சம் பல சொற்கள் எஞ்சி நிற்பது என்றும் கொள்வர் சேனாவரையர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் இதே கருத்தினை உடையவர், நன்னூல் காண்டிகை உரைகாரரும் இக்கருத்தினரேயாவர்.

நச்சினார்க்கினியர் 'வயிறு மொடுமொடுத்தது' என்னும் தொடரினைக் காட்டி, உண்ணவேண்டா' என்னும் இசையிற்குறிப்பினைத் தானே கூறி நின்றது' என்பர். இவரது கருத்துத் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு ஏற்புடைத்தாகத் தோன்றுகிறது.

## குறிப்பெச்சம்:-

இளம்பூரணர் குறிப்பெச்சத்திற்குப் பின்வரும் எடுத்துக்காட்டுத் தருகிறார்.

'விண்ணென விசைத்தது' - குறிப்பெச்சம்; அது தன்

குறிப்பினையே கொண்டு முடிந்தது என்பது இளம்பூரணம். இது பொருத்தமாகத் தோன்றவில்லை.

சேனாவரையர் குறிப்பெச்சத்திற்கு எடுத்துக்காட்டாக

'இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கை கொல்லும் காழ்த்த விடத்து'

என்னும் குறட்பாவைக் காட்டியுள்ளார். இக்குறட்பா 'தீயாரைக் காலத்தால் களைக' என்ற தொடர்மொழி எச்சமாய் நின்று குறிப்புப் பொருளை வெளிப்படுத்தலால் குறிப்பெச்சமாயின என்று விளக்கம் செய்வர். இவரது விளக்கம் இளம்பூரணர் விளக்கத்தினும் நேரிதாகும்.

நச்சினார்க்கினியர் குறிப்பெச்சத்திற்கு 'கற்கறிக்க நன்கு அட்டான்' என்றால் 'தீங்கு அட்டான்' என்றும் குறிப்பு, தோன்றிய எஞ்சுபொருளினைத் தானே கூறி நின்றது என எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். இது சேனாவரையர் கருத்துடன் ஒத்துள்ளமை உணரலாம்.

இனி, பரிமேலழகர், 'இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே, ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல்' என்னும் குறட்பாவில் (415) 'கல்வி உடையரேனும் ஒழுக்கமில்லாதார் அறிவிலர் ஆகலின், அவர் வாய்ச் சொல் கேட்கப்படாது என்பது தோன்ற 'ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்றார் என்று கூறி, 'வாய்' என்பது தீச்சொல் அறியாமையாகிய சிறப்புணர நின்றது'; 'அவற்றைக் கேட்க' என்பது குறிப்பெச்சம் என்று விளக்கியுள்ளார். இக்குறட்பாவில் வெளிப்படையாக இல்லாத கருத்தினைக் குறிப்பால் உணர்த்தினமையின் இது குறிப்பெச்சமாயிற்று.

சிவஞான முனிவர் சிவஞானபோதம் ஐந்தாம் நூற்பாவிற்கு உரை வகுத்தபின், நூற்பாவில் குறிப்பால் உணரப்படும் கருத்தினை 'உயிர்களையும் கருவிகளையும்' செயற்படுத்துதல் பற்றி முதல்வன் விகாரம் எய்துதல் இல்லை என்பது குறிப்பெச்சம் எனக் கூறியுள்ளார். இக்கருத்து நச்சினார்க்கினியர்

சேனாவரையர், பரிமேலழகர் ஆகியோரின் கருத்தினை அரண் செய்து நிற்பது புலப்படும்.

இனி இலக்கணப் பேரறிஞர் காலம் சென்ற ஆ.பூவராகம் பிள்ளை அவர்களும் க.வெள்ளை வாரணனாரும் மேற்கூறிய மாறுபாடுகள் நிறைந்த பண்டை உரைகாரர்களின் உரைகளை மனம் கொண்டு பின்வரும் முடிவுக்கு வருவராயினர்:

சொல்லெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் என்னும் மூன்றும் ஒரு தொடர்க்கு ஒழிபாய் எஞ்சிநிற்பன. எனவே இவை பிற சொற்களை விரும்பி நில்லாது, சொல்லுவார் குறிப்பில் எஞ்சி நின்ற பொருளை உணர்த்துவன என்பர் ஆசிரியர். ஒரு சொல்லளவு எஞ்சி நிற்பன சொல்லெச்சம் என்றும், தொடராய் எஞ்சுவன இசையெச்சமென்றும், இங்ஙனம் சொல்வகையான் அன்றிச் சொல்லுவான் குறிப்பினால் வேறு பொருள் எஞ்ச நிற்பன யாவும் குறிப்பெச்சமென்றும் கூறுப" என விளக்குவார் வெள்ளைவாரணனார்.

பேரறிஞர் பூவராகம்பிள்ளை, 'குறிப்பெச்சம் ஒரு தொடர் முழுவதும் (வாக்கியம்) எஞ்சி நின்று பொருளைக் குறிப்பால் உணர்த்துவது; இசையெச்சம் சில சொற்கள் மட்டும் எஞ்சி நின்று பொருளைக் குறிப்பால் உணர்த்துவது; சொல்லெச்சம் ஒருசொல் எஞ்சி நின்று பொருளைக் குறிப்பால் உணர்த்துவது என்று வேறுபாடு அமைத்துக் கொள்ளலாம். அவர் மேலும், 'பிரிநிலை எச்சம் முதலிய ஏழும் தாம் பிற சொற்களைக் கொண்டு முடியும்; சொல்லெச்சம் முதலிய மூன்றும் தாம் பிறவற்றிற்கு முடிபாக வரும் என்பது கருத்து' என்று விளக்குவது ஏற்புடையதாக உள்ளது. வெள்ளை வாரணனார் விளக்கமும் இக்கருத்துக்கு அரண் செய்வதாகவே அமைந்துள்ளது எனலாம்.

பாவலரேறு ச.பாலசுந்தரனார் அவர்கள் மூவகை எச்சங்கள் பற்றித் தரும் விளக்கம் மனம் கொள்ளத் தக்கது:

**சொல்லெச்சம் எனப்படும் எச்சம் அச்சொல்லளவில் பொருள் தோன்றி முன்னோ பின்னோ பிறிதாக எஞ்சி நிற்பதன்று.**

பிற எச்சங்கள் முன்னோ பின்னோ வரும் பிற சொற் பொருளான் முடிவனவும், பிற சொற்பொருளைத் தோற்றுவிப்பனவுமாகி நிற்குமன்றே; இஃது அங்ஙனமாகாது அச்சொல்லே எச்சப் பொருள் பயந்து நிற்கும் என்றவாறு.

(எ-டு): 'அகர முதல் னகர இறுவாய் முப்பஃதென்ப' என்பதன்கண் 'என்ப' என்றும் பயனிலை அத்தொடரை முடித்து நின்றது. அதனை விரிப்பின் என்று கூறும் எனப்பொருள் தரும். அங்ஙனம் விரிந்த அவ் எச்சப்பொருள் 'என்ப' என்னும் சொல்லினிடமாகவே நிற்றலைக்காணலாம், அதனான் 'சொல்ல ளவல்லது முன்னும் பின்னும் எஞ்சுதலின்றே என்றார்'

இனி இசையெச்சம் பற்றியும் குறிப்பெச்சம் பற்றியும் அவர் கூறுமாறு:

இசை எச்சம் என்பது கூறுவோரது கூற்றினுள் பெற வேண்டிய விளக்கம் நுட்பமாக அமைந்து எச்சப் பொருளாதல் (இசை - சொல்) என்றும், குறிப்பெச்சமானது, 'ஒன்றைக்கூறுவோர் தம் இன்றியமையாத கருத்துக் குறிப்பாக அமைந்து எச்சப் பொருளாதல் என்றும் கொள்க என்பதாம்.

பாவலரேறு அவர்கள் சொல்லெச்சம், குறிப்பெச்சம் பற்றிக் கூறியுள்ள விளக்கம் பெரிதும் ஏற்புடைத்தாம், இசை எச்சம் பற்றிக் கூறுவது ஆய்வுக்குரியது. இது பற்றி நச்சினார்க்கினியர் தரும் விளக்கமே சாலப் பொருந்தும் எனக் கொள்ளலாம்.

மேலே கூறிய கருத்துக்கள் மேலும் சிந்தித்தற்குரியனவாகும்.

# தமிழிலக்கிய வரலாற்றுச் சிந்தனை

பேராசிரியர். தமிழண்ணல்

தமிழில் இதுவரை எழுதப்பெற்று வந்துள்ள இலக்கிய வரலாறுகளில் நிறைகளும் உள; குறைகளும் உள. இனி எழுதப்படுவனவற்றுள்ளும் நிறைகளைக் கூட்டலாம்; குறைகளைக் குறைக்கலாம்.

பாவேந்தன் "அந்தாதி பார்த்தொரு அந்தாதி தன்னையும் கலம்பகம் பார்த்தொரு கலம்பகந் தன்னையும் எழுதிவந்த புலவரிடையே, புதிய ஒளி பாய்ச்சப் பாரதி வந்தான்" எனப்பாடுவார் இலக்கிய வரலாற்று நூல்களும் அதுபோல் ஆனதுண்டு.

இலக்கிய வரலாறு எழுதுவதிலுள்ள முக்கியமான சிக்கல்கள் என்ன?

1. இலக்கிய வரலாற்றை இலக்கியக் கொள்கையைவிட்டும் திறனாய்வை விடுத்தும் பிரிக்க முடியாது என்பார் 'ரெனே வெல்லாக்கு'.

2. இலக்கிய ஆசிரியன் வரலாறுவேறு, அவ் ஆசிரியர்கள் படைத்த நூற்பட்டியல்கள் வேறு. அவை இரண்டும் துணை மூலங்களாக அமைய, இலக்கியப்படைப்பின் வரலாற்றை அதாவது அதன் சொந்த, அதற்குரிய வரலாற்றை எழுதவேண்டுமென்பர் ஒப்பியலார்.

3. இலக்கியம் காலச் சூழலுக்கும் மக்கள் சுவைத்திறனுக்கும் ஏற்பத் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்கிறது என்றும் கூறுவர்.

இலக்கியம் ஒரு சமுதாயத்தின் படைப்பு. அம் மன்னாயத்தை அரசுகளும் ஆள்வோரும் கட்டுப்படுத்த முயலுவதும், மக்கள் அரசுகளைக் கட்டுப்படுத்த முயலுவதும் நிகழக் கூடும்.

ஒன்றில் சலிப்பேற்படும் போது, மக்கள் பிறிதொன்றை விரும்பி அதற்கு மாறுவதுண்டு. மக்களை ஏற்க வைக்க,

அவர்கள் சுவைநலன்களைக் கருத்தில் கொள்பவனே, புகழ்மிக்க படைப்பாளி ஆகின்றான். மிகுதிறனுடைய படைப்பாளி தன்போக்கிற்கு ஏற்பச் சமுதாய மாற்றங்களை உருவாக்குகின்றான்.

4. இலக்கிய வரலாறு எழுதுபவனுக்கு மொழி அறிவு மிகமிக இன்றியமையாதது. தொல்காப்பியர் வழங்கியல் மருங்கு, செய்யுள் (இலக்கிய) மருங்கு எனத் தமிழுக்கு இரு மருங்கு இருப்பதை அடிக்கடி குறிப்பிடுவார். சில சொற்கள் தவிர்க்க முடியாதபடி வழக்கிற்கு வந்துவிட்டால், 'இலக்கண மருங்கில் சொல்லாறல்ல' என்பதோடு முடியாதபடி வழக்கிற்கு வந்தபோது, 'முடிய வந்த அவ் வழக்கு உண்மையின், கடியலாகா கடனறிந்தோர்க்கே' என, உலக வழக்கை ஏற்கச் சொல்வார். அதற்காகக் கொச்சைகளையும் குறுவழக்குகளையும் பிழைபட்டவற்றையும் அவர் ஏற்பதில்லை. யான் என்பது இலக்கிய வழக்காகப் புலவர் நாவில் பொருந்தியிருந்த, அதே காலக்கட்டத்தில் 'நான்' என்பது வழக்கில் இருந்திருக்கும். யானை இருந்த போதே, மக்கள் 'ஆனை' எனப்பேசியிருப்பர். தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டு, இருவழக்காக இருந்துவந்துள்ளது. இரண்டிற்கும் ஒரு 'போட்டி' இருந்ததென்றும் கூறலாம். கட்டளைத் தமிழ் என்பது எழுத்துத்தமிழ் - அது உலக வழக்கை எளிதில் ஏற்பதில்லை. ஓரளவு தரமுடையனவே, காலப்போக்கில் கட்டளைத் தமிழில் ஏறின. எழுத்துப்போலி, தகுதிவழக்கு என்றெல்லாம் இவை ஏற்கப்படுவதற்கான, காரணங்களைக் கண்டறிவதுண்டு.

உலக வழக்குத் தரம் தாழ்ந்துவிடாத போது, இலக்கியம் அதை ஏற்றது. இலக்கிய வழக்கினை எளிமை கருதி, உலக வழக்கை ஒட்டி (தரம் சிதையாமல்) எழுதும் மனப்பான்மை படைப்பாளிகளிடம் காணப்பெற்றது. படைப்பவன் மொழியறிவு, சுவையுணர்விற்கு ஏற்பவும் இவை மாறிமாறி, ஒரே காலக்கட்டத்தில் காணப்படும். படைக்கப்படும் இலக்கிய வடிவம், வகைக்கு ஏற்பவும் இவை வேறுபடும். ஒரே படைப்பாளி கவிதை எழுதும் நடையிலேயே, உரைநடையை எழுதுவதில்லை. பாரதியிடம் இவ்வேறுபாட்டைக் காணலாம்.

ஒருவரே எழுதினும் இசைச்சார்ந்த பாட்டுநடை வேறாகவும் செம்மை தழுவிய செய்யுள் நடைவேறாகவும் அமைய வாய்ப்புள்ளது. பாரதியின் கும்மிப்பாட்டுக்கும் மணிக்குளத்து விநாயகர் நான்மணி மாலைக்கும் நிரம்ப வேறுபாடுண்டு. பிற்காலத்தில் ஒருவர், இவை வெவ்வேறு கவிஞர்களால் எழுதப்பட்டன என்று சாதிக்கக்கூடும்.

இவை போன்ற மொழியின் இயல்புகளை முற்ற அறியாமையால், சிற்சில வரலாற்றுப் பிழைகள் நேர்ந்துள.

5. இலக்கிய வரலாறு எழுதுபவனுக்குத் தான் வரலாறு எழுதப்புகும் அவ்விலக்கிய நூலில் முழுமையான பயிற்சி வேண்டும்.

தொல்காப்பிய அறிவு அறவே இல்லாமல், அந்நூல் பற்றிக் கருத்துரைப்பவர்கள் பலர். கம்பரையோ, சேக்கிழாரையோ முழுமையாகப் படித்து, அவை தோன்றிய காலப் பின்னணிகளை ஆராய்ந்து அறியவேண்டும். அந் நூலை அவர் எழுதியுள்ள முறையைப் பழுதறத்தெரிந்து - அவரது நோக்கம், எதிர்பார்ப்பு, படைப்பாற்றல், சுவைத்திறன், கலைத்திறமை யாவற்றையும் கருத்திற் கொண்டாலன்றி, அந் நூலைப் பற்றிய முழுமையான இலக்கிய வரலாறு எழுதமுடியாது. இத்தகைய தமிழ் இலக்கிய வரலாற்றை ஒருவரே முழுமையாக எழுதிவிட இயலாது. தனித்தனியே எழுதினாலும் கூட்டு முயற்சிவேண்டும். இயைபும் தொடர்ச்சியும் காட்டவேண்டும். சுருக்கமாகச் சொன்னால், 'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' எனும் அளவு கற்றவர்களே, இலக்கிய வரலாற்றை முழுமையாக எழுதமுடியும்.

6. இலக்கிய வரலாற்றுக்கு மொழிவரலாறும் அரசியல் வரலாறும் சமுதாய வரலாறும் எவ்வளவு துணையாகுமோ, அந்த அளவு கல்வெட்டு, செப்பேடு, தொல்பொருள் ஆய்வு வரலாறுகளும் பண்பாட்டு மானுட வரலாறும் இன்றியமையா தனவாகும். இவற்றுடன் நாட்டுப்புறவியல் பற்றிய அடிப்படை அறிமுகமும் அறிவும் தேவைப்படும். தொன்மங்கள் (புராணக் கூறுகள்), பழக்க வழக்கங்கள், சடங்குகள், வாழ்வுநெறி முறைகள் இவையும் அறிந்திருக்கப்படுமேல், இலக்கிய வரலாற்றைத் தெளிவுபடுத்தி எழுதலாம்.

இவைபோலும் அடிப்படைகளுடன் ஓர் இலக்கிய வரலாற்றை எழுதவேண்டுமேல், அஃது ஒரு வாழ்நாட் பணியாகிவிடும். இன்று புறப்படும் வரலாறுகள் மாணவர்கட்கான கையேடுகள். இவற்றைக் குறைகூறிப்பயனில்லை என்பதே இதுகாறும் கூறப்பட்டது.

இனி ஓர் இலக்கிய வரலாற்றை எங்ஙனம் பகுத்துக்கொண்டு ஆராயலாம் எனப்பார்க்க வேண்டும். அவ்வாறு பகுக்கப்படுவன, பிறகு இயைபுபடுத்திப் பார்க்கப் படவேண்டும். இவை பல படலங்களாக விரியும்.

1. தமிழர் வரலாற்றில் அரசியல் மாற்றங்களும் மக்கள் மனநிலை மாற்றங்களும் நேர்வன. இதனை அரசியல் பின்னணி என்று மட்டும் கருதாமல் மக்கட் சமுதாய மாற்றங்கள் என்றும் எண்ணலாம்.

தமிழர் சமய உருவாக்கமும் புறச் சமயத்தாக்கமும் வடிவமைப்புக்களிலும் பெரும் பங்கு வகித்துள.

தனிப்புலவர் சார்பும் அவரது தனித்திறனும்கூட, முக்கிய விளைவுகளையும் எதிர்விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இந்நிலையில் எதிர்விளைவை ஏற்படுத்திய படைப்பாளிகளும், நூல்களும் கண்டறியப்படவேண்டும்.

2. புதிய விளைவுகளை ஏற்படுத்திய புலவர்களை, விதந்து எண்ணிப் பார்க்க வேண்டும் தொல்காப்பியரால் இலக்கண நூல்களும், திருவள்ளுவரால் நீதி நூல்களும் சங்கத் தொகையால் பல்வேறு இலக்கிய வகைகளும் புதுமைப்பித்தனால் சிறுகதைகளும் பாரதியால் கவிதை இலக்கியங்களும் பெற்ற மாற்றங்கள் போல்வன பல சிந்திக்கத்தக்கன. ஔவையின் ஆத்திசூடி, மனோன்மணியம் சுந்தரனாரின் நாடகக் காப்பியம் போன்றவை தாக்கத்தை ஏற்படுத்தி, அவை வழி வந்தவை பல என்னுமாறு, வளர்ச்சி நிலையைக் காட்டின.

3. சமய சமுதாய மாற்றங்களின் விளைவுகளே மணிமேகலையும் மொழிபெயர்ப்புக் காப்பியங்களும் எனலாம். ஐரோப்பியர் வருகைக்குப்பின் ஏற்பட்ட புதிய மறுமலர்ச்சிகள்,

உரைநடை வகைகள் மிகப்பலவாகும். முன்னதாக நாடு சிறுசிறு பாளையப்பட்டுக்களால் ஆளப்பட்டதால் ஏற்பட்டவை சிற்றிலக்கிய வகைகள் ஆகும். அதற்கும் முன்பாக தோன்றிய பக்தி இலக்கியங்கள் யாவும் சமுதாயத் தாக்கத்தால், இலக்கியத்தில் ஏற்பட்ட புதிய விளைவுகள் எனலாம். தமிழில் தோன்றிய திருமுறைகளும் திவ்விய பிரபந்தங்களும், முற்றிலும் மக்களால் - மக்களின் எழுச்சியால் பிறந்தவை. அரசர்களையும் அடிபணிய வைத்தவை. இவ்வாறு மக்கள் இலக்கியத்தில் ஏற்படுத்திய செல்வாக்கையும் இலக்கியம் மக்களிடம் ஏற்படுத்திய பாதிப்பையும் நன்கு பகுத்தறிந்து அகப்புறச் சான்றுகளுடன் எழுதவேண்டும்.

4. காலந்தோறும் ஏற்பட்ட தமிழ்க் காப்பு முயற்சிகள் தனி வரலாறாக எழுதப்பட்டு, முழுமையில் இணைக்கப்படவேண்டும். தொல்காப்பியர், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தில் அரங்கேற்றினார் என்பதும் செந்தமிழ் இயற்கை சிவனிய நிலத்தொடு முந்துநூல்கள் கண்டாரென்பதும் நூல் முழுவதும் காணப்படும் பிற செய்திகளும் நூற்றுக்கணக்கான முன்னோர்களை அவர் நினைவூட்டுவதும் ஒரு தமிழ்க்காப்பு முயற்சியையே நினைவூட்டுகின்றன. கடல்கோற்களால் தமிழ் மொழி இலக்கியம் பண்பாடு ஆகியவை இடையறவு படாமல் காக்கப்பட்டுள்ளன.

திருவள்ளுவர் சங்க இலக்கியம் திருமூலர் பக்தி இலக்கியம் குமரகுருபரர் பாரதி பாரதிதாசன் ஆகியவர்களிடமும் மெய்கண்டார் வள்ளலார். தண்டபாணி சுவாமிகள் மறைமலையடிகள் பாவாணர் எனக் குறிக்கத் தக்கவர்களிடமும் காணப்படும் தமிழ்க்காப்பு முயற்சிகள் தனித்தனி நூலில் விவரிக்கத்தக்கன.

உரையாசிரியர்களும் இசை நாட்டிய நாடக நூல் வளர்ச்சி கண்டவர்களும் இத்துறையில் எண்ணிப் பார்க்க வேண்டியவர்கள்.

சமஸ்கிருதமயமாக்கும் முயற்சி தொல்காப்பியர் காலத்திலேயே எட்டிப் பார்த்துள்ளது. களப்பிரர் பல்லவர்

காலத்தில் தமிழ் மூல நூல்கள் அழிக்கப்பட்டு எல்லாம் வடமொழியிலிருந்து வந்தவை போலக் காட்டப்பட்டன. வடமொழிப் பெயர்ப்படுத்தல் வடமொழிக் கலைச் சொற்படுத்தல் வடமொழி மூலப்படுத்தல் வடமொழிவண்ணப்படுத்தல் என அதைப் பலவிதமாகப் பகுத்து ஆராய வேண்டும். தமிழர் வானநூல் கணிதம் இசை நாட்டியம் சிற்பம் போல்வன பலவும் வடமொழிமயமாக்கப்பட்டன. ஊர்ப் பெயர் இறைவன் இறைவி பெயர் மக்கட்பெயர் எல்லாம் மாற்றுருவம் பெற்றன. இவை மட்டுமன்றி தமிழர் தம் திருவிழாக்கள், வழிபாட்டு முறைகள் வாழ்வியற் சடங்குகள் யாவும் வடமொழிமயமாயின தமிழிலக்கிய வரலாற்றில் இதற்கும் பெரும் பகுதி இடமுண்டு. தமிழ்த்தொன்மங்கள் எல்லாம் வடமொழித் தொன்மங்களாக்கப்பட்டன. சில கலப்புடையவை ஆயின. சில விளங்காத அளவுமாறிப்போயின கண்ணன் கதைகள். மாதவி ஆடிய பதினோராடல்கள் யாவும் ஆராயத்தக்கன.

தமிழில் யாப்பு வடிவ வரலாற்றுக்குத் தனி இடம் உண்டு. காலந்தோறும் ஒவ்வொரு யாப்பு செல்வாக்குப்பெற்று விளங்கியுள்ளது. பொருளுக்கேற்ற யாப்பும் யாப்பு வடிவிற்கேற்ற பொருளும் என இயைபுபட அமையுமிடங்கள் பல ஒரே யாப்பு வடிவமாயினும் சொல்லவந்த பொருளுக்கு ஏற்ப அவை சிறுசிறு மாற்றங்களைப் பெறுவதுண்டு உலக மொழிகளில் இத்தனை யாப்பு வகைகள் உள்ள ஒரே மொழி தமிழே எனலாம்.

சித்தர் பாடல்களிலுள்ள யாப்பு வடிவங்கள் நாட்டுப்புறப் பாடல்களிலுள்ள யாப்பு வடிவங்கள் காவடியாட்டம் சிலம்பாட்டாம் போலும் ஆடல்களுக்கும் விளையாட்டுக் களுக்கும் ஏற்ற வடிவங்கள் இசைப்பாட்டு வடிவங்கள், சந்தப்பாடல்கள், வண்ணங்கள், நாடகப் பாடல்கள் இன்றைய திரையிசைப் பாடல்கள் என இது விரியும்.

தமிழில் பாட்டுப் பொருள்கள் அடிக்கருத்துக்கள் அவற்றின் கருத்து வளர்ச்சிகள், கலப்புகள், மாற்றங்கள் எனப் பலவுள. ஒரே அடிக்கருத்து. சில நூற்றாண்டுகளாக எங்ஙனம் வளர்ந்தது

என உய்த்தறியலாம். மேனாட்டாரின் அடிக்கருத்தியலாய்வுகள் இதற்கு வழிகாட்டும்.

இலக்கியத்தில் அடிக்கருத்தும் தலைமைக் கருத்தும் துணைமைக் கருத்துக்களும் எனப்பகுப்பார்கள். சங்க அகப் பாடல்கள் தொடங்கி இன்றைய புதுக்கவிதை வரை இது நீண்டு செல்லும் வரலாறாகும்.

மேனாட்டார் குறிப்பாக ஒப்பியலார் இலக்கிய வகைமை வரலாற்றையே. அடிப்படையான இலக்கிய வரலாறாகக் கருதுகிறார்கள். தமிழில் அகம் சார்ந்த இலக்கிய வகைகள் புறம் சார்ந்த இலக்கிய வகைகள் கலப்பின வகைகள் விருந்து எனப்படும் புதிய வகைகள் என மிகப்பலவுள.

யாப்புப் போலவே தமிழில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஓர் இலக்கிய வகை அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிந்து இனிமை தந்துள்ளன.

இலக்கிய வகைகள் ஓர்இனச் சாயலுடையவை. ஒரு குடும்பத் தோற்றமுடையவை. சிறுசிறு மாற்றங்காட்டுபவை. புதுமை படைப்பவை. தனக்குப்பின் ஒரு வழிமுறையை (சந்ததியை) விளைவிப்பவை எனப்பலவுள.

தமிழில் தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கிய வகைகள் பல எழுவகை யாப்பும் எட்டுவகை வனப்பும் வகைமைகளே நாட்டுப்புற இலக்கிய வகைகள் கணக்கிலடங்கா. சித்தர்களின் பாடல்களையும் வகைமைப்படுத்தலாம்.

நாட்டுப்புற இலக்கியத்திலிருந்தே எழுத்து மொழி இலக்கியம் தோன்றி வளர்கிறது. வாய்மொழி இலக்கியமே உலக இலக்கியமனைத்திற்கும் தாய் இலக்கியம். இந் நோக்கில் பார்த்தால் வடிவம், பொருள், உத்தி மூன்றின் வரலாறாக அது இணையும்.

இலக்கியக் கொள்கைகள் இலக்கியத் திறனாய்வுகள் இவற்றின் வரலாறும் தனிச்சிறப்புடையது. தமிழில் அரங்கேற்றம் என்பது ஒரு புது முறைத் திறனாய்வேயாகும்.

இன்றைய 'கிரிட்டிசிசம்' என்பது, பெரிதும் குற்றங்காணுதல் எனும் பொருளில் வழங்குகிறது. தமிழில் அரங்கேற்றம் என்பது இதனுடன் ஒத்ததேயாகும்.

திறனாய்வுக் கலை தமிழுக்குப் புதிது என்பர். நோக்கு எனும் கோட்பாடு திறனாய்வை ஒத்ததே. நம் உரையாசிரியர்கள் பல இடங்களில் சிறந்த திறனாளிகளாக மிளிர்கின்றனர்.

நயங்காண்டல் ஒன்றே திறனாய்வு என்பது மிகப் பிற்பட்ட மரபு. மறித்து நோக்கிப் பயன்கோடல் எனப்பட்ட நோக்கு அத்தகையது அன்று.

தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கியக் கொள்கைகளும் அவற்றின் வளர்ச்சிகளும் ஆராயத்தக்கன. மேனாட்டார் குறிப்பிடும் படிமம் உருத்தோற்றம் தொன்மப் படிமம் போல்வனவும் வடமொழியிற் காணப்படும் தொனி, இரசம் போல்வனவும் தமிழ் இலக்கியத்தில் ஏற்றிப் பார்க்கத்தக்கன. இக்கொள்கை வழி இலக்கிய வளர்ச்சியும் ஒரு வரலாறேயாகும்.

மாணவர்களுக்கு ஒரு பருந்துப் பார்வையாகக் காட்ட வேண்டியன. இலக்கிய வரலாற்றில் ஏற்பட்ட திருப்புமுனைகளும் தமிழ்க் காப்பு முயற்சிகளும் மறுமலர்ச்சிகளுமேயாம்.

இலக்கிய வகை ஆய்வு (யாப்பு, அணி, உத்தியுடன்) சற்று மேம்பட்ட நிலையில் படிக்க வைக்க வேண்டியது.

மேலே குறிப்பிட்ட அனைத்தையும் உள்ளிட்ட முழுமையான இலக்கிய வரலாறு பல படலங்களாக எழுதப்பட வேண்டிய ஒன்று. இவற்றைத் தனித்தனி வரலாறாகப் பார்ப்பதும் இயைபுபடுத்தி முழுமையாகப் பார்ப்பதும் சிறந்த - ஆழ்ந்த பரந்துபட்ட இலக்கியக் கல்வியாகும்.

# திருவெம்பாவை 12

பேராசிரியர் சுப.அண்ணாமலை

மகளிர் மலர்கள் பூத்துத் திகழும் பொய்கையிலே நீராடுகின்றனர். ஆடிக்கொண்டே, நீறணிந்த பெருமானைப் பாடுகின்றனர்.

அவர்கள் இன்புறும்படி, முன்பு மாலையணிந்து மகிழ்வித்த சிவபெருமான் பின்பு எழுந்தருளவில்லை. பிரிவு வேதனைக்கு ஆளாகிய அவர்கள், பெண்பிறவிக்கே பெரிய துயராகிய அதில் அழுந்தினர். பின்னர், இறைவன் அருள் பாலித்து, அவர்களைக் கூடி மகிழ்வித்தான். அவர்களின் பிரிவுத்துயர் பிறவிக்கே துயர்.

"ஆர்த்த பிறவித்துயர்"

பெண்ணாகப் பிறந்தவருக்குக் காதலின் பிரிவை விடத் துன்பம் உண்டோ? அது நீங்கியது. பேரின்பம் பிறந்தது. ஆடி மகிழ்ந்தாள் அன்புக்காதலி.

"ஆர்த்த பிறவித் துயர்கெட, நாம்
ஆர்த்து ஆடும் தீர்த்தன்"

பிறவி துன்பம் அதுவும் மாறி மாறி ஒழியாமல் வருவது பெரிய துன்பம். இதைத் தருபவன் யார்? நாம் செய்த வினைகளின் பயனை நாம்தான் அனுபவிக்க வேண்டும் என்பது நியாயம் ஆதலால், உலகத் தலைவனாகிய இறைவன், பிறவிகளைத் தந்து, வினைப்பயனாகிய இன்ப துன்பங்களை அனுபவிக்க வைக்கின்றான். **அனுபவம் யாவருக்கும் உண்டு, அறிவுதான் பலருக்கு வருவதில்லை,** எனவே, பிறவியைத் தருவதால் பந்தமும் அவனே. பின்பு, பந்த பாசங்களால் வந்த துயரங்கள் எல்லாம் ஞானத்தீயில் வெந்து மடியும்படி செய்து, நமக்குச் சிவஞானத்தைத் தந்து முக்திக்கு ஆளாக்குபவனும் அவனே. பந்தமாகிய பெத்தத்திலும் அவனே தலைவன். முக்தியிலும் அவனே தலைவன்.

‘ஆர்த்த’ - என்பது, கைகொட்டிச் சிரிக்க என்றும் பொருள்படும். முதலில், பிறவி நம்மைக் கைகொட்டிச் சிரித்தது. வாழ்ந்து என்ன கண்டாய் என்று கேட்டது. இறைவன் அருளுக்கு ஆளாகிப் பக்குவம் பெற்ற பிறகு, நாம் பிறவியைக் கைகொட்டிச் சிரிக்கிறோம். “யான் ஏதும் அஞ்சேன், இறப்பதனுக்கு என் கடவேன்” என்று கூறும் நிலையை அடைகின்றோம்.

இறைவன் பேராற்றல் உடையவன். இந்த மண்ணுலகையும் விண்ணுலகத்தையும் எண்ணிலடங்காத எத்தனையோ உலகங்களையும், எல்லாருடைய வாழ்வையும் படைத்து, காத்து, அழித்து, இவற்றில் உயிர்களுக்கு மறைப்பை உண்டாக்கி, முடிவில் அருள் செய்பவன். இவற்றை எல்லாம் தான் செய்துகொண்டேயிருப்பதை, தில்லையில் ஆடும் நடனத்திருக்கோலத்தால், நமக்கு உணர்த்துபவன்.

**“நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்**
**கூத்தன், இவ்வானும் குவலயமும் எல்லோமும்**
**காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி”**

ஆம். ஐந்தொழிலும் விளையாட்டாகச் செய்து விடுகிறான். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் செய்யும் மூவரையும் அழித்துப் பிறகு மீண்டும் படைப்பவன் ஆதலின், “தீயாடும் கூத்தன்” என்றார். இதில் சிவபெருமானுடைய பேராற்றலும் பரத்துவமும் புலப்படுகின்றன. அதனாலும் அவன் ‘உடையான்’ ஆகின்றான்.

பிறந்து பிறந்து, அலுத்து, அன்பை யெல்லாம் ஆண்டவனுக்கே செலுத்தி வாழும் அன்பர்களின் மனப்பக்குவத்தைப் புரிந்துகொண்டு, அவர்களிடம் வார்த்தை பேசுகிறான். ஏதோ ஒரு வடிவத்தில், குருவாகி வந்து அவன் செய்யும் ஞானோபதேசம் இது.

**"வார்த்தையும் பேசி"**

இந்த வார்த்தை, அன்பரின் பக்குவத்திற்குப் பயனளிக்கும் வார்த்தை. படீரென்று உண்மையை வெளிச்சமிட்டுக் காட்டும் வார்த்தை. இவ்வாறு உண்மை அறிவதை-நம்மையே நாம் புரிந்து கொள்வதை- 'ஆன்ம தரிசனம்' என்பர்.

இந்த வார்த்தையைக் கேட்கக் கொடுத்துவைத்த அன்பர்கள், மணிவாசகரைப் போல, கனிந்து கனிந்து காதல் பெருக்கும் நிலையை அடைந்தால், இந்த வார்த்தையே, அவர்களுக்கு இறைவனின் திருவுள்ளத்தை வெளிப்படுத்தும்.

இவ்வார்த்தையைப் பேசி, இறைவன், தம்மை மகிழ்வித்த பேரின்பத்தை மணிவாசகர் வெளியிடுகின்றார். அதையே பொய்கையில் திளைத்தாடுவதால் வரும் இன்பமாக நமக்குக் காட்டுகின்றார்.

**"வளை சிலம்ப, வார்கலைகள் ஆர்ப்பரவம் செய்ய**
**அணிகுழல்மேல் வண்டார்ப்ப"**

வளையல்கள் ஒலியெழுப்புகின்றன. ஆடைகள் அலைகளால் உந்தப்பட்டுச் சரசர வென்று சத்தம் செய்கின்றன. கூந்தலில் உள்ள மலர் மாலைகளில் வண்டுகள் முரல்கின்றன. இவை அகப்பொருள் இன்பத்திற்கு அடையாளங்கள்.

இவ்வடிகளால், அருள் அனுபவத்தின் விளைவுகளையும் அறியலாம். அவற்றைத் "தத்துவ சுத்தி' என்பர். நமது உடம்பும் உலகமும் மனமும் அறிவும் தத்துவங்களின் கூட்டமைப்புத்தான் இவை தூய்மை பெறுவதைத் தத்துவசுத்தி என்று குறிப்பார்கள். உலகியலுக்கு நம்மை இழுக்கும் இவற்றை, அருளியலில் திருப்பிவிடும் மடைமாற்றந்தான் தத்துவ சுத்தி.

'வளை சிலம்ப" என்பது நாதம் முதலிய சிவதத்துவங்களின் மடைமாற்றம்; வார்கலைகள் ஆர்ப்பரவம் செய்ய என்பது,

கலாதத்துவம் முதலிய வித்தியா தத்துவங்களின் மடைமாற்றம்; "அணி குழல்மேல் வண்டார்ப்ப" என்பது பிரகிருதி தத்துவத்தின் மடைமாற்றம். ஏனென்றால், அணி என்பது ஒளி என்ற காட்சிப் புலனையும், குழல் என்பது மலர் மாலையைக் குறித்து நின்று, வாசனை என்ற புலனையும், வண்டு ஆர்ப்ப என்பது ஓசைப் புலனையும், அது மாலையில் படிவதால் ஊறு என்ற புலனையும் தேன் உண்பதால் சுவை என்ற புலனையும், ஆக, ஐம்புலன்களையும் உணர்த்தி,

> "சுவையொளி ஊறு ஓசை நாற்றமென் றைந்தின்
> வகை தெரிவான் கட்டே உலகு"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப, பிரகிருதி தத்துவம் இருபத்து நான்கையும் குறிப்பாகக் காட்டுகிறது. இத்தத்துவங்களுக்கு உட்பட்டே நாம் வாழ்கின்றோம். ஆதலால், இவற்றின் மடைமாற்றம், நம் ஆன்மீக முன்னேற்றத்தின் ஒரு படி; முக்கியமான படி.

மணிவாசகர் இப்படியில் ஏறி இறைவனின் அருட் பொய்கையில் இறங்கியவர். அதில் திளைத்து அருளின்பம் பெற்றவர்.

> "பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
> ஏத்தி இருஞ்சுனை நீராடேலோ ரெம்பாவாய்"

# தமிழின் பழமை

பெரும்புலவர் திரு. திருநாராயணய்யங்கார்

நிலவுலகில் தோன்றிய செவியறிவுடைய உயிர்ப் பொருள்களெல்லாம் தம் உள்ளத்தில் நிகழும் விருப்பு வெறுப்பு முதலியவற்றைத் தம் மினத்துக்கு ஒலிக்குறிப்பால் வெளியிடுகின்றன. அவ்வொலிக்குறிப்பே அவற்றிற்குப் பேச்சாக அமைந்துள்ளது.

காக்கைகுச் சோறிடும்போது முதலில் வந்த ஒரு காக்கை தன் இனத்தை ஒலிக்குறிப்பால் அழைத்துக்கொண்டு அவற்றுடன் கூடியிருந்து உண்கின்றது. வைகறையாமத்திற் கரிக்குருவிகள் ஒன்றோடொன்று கனிந்துபேசி மகிழ்கின்றன. இவற்றைக் 'காக்கை கரவா கரைந்துண்ணும்' என்று திருவள்ளுவனாரும் 'கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தங்கலந்து பேசின பேச்சரவங்கேட்டிலையோ!' என்று கோதைப் பிராட்டியாரும் கூறியுள்ளார்கள்.

இவ்வாறே அணில் கிளி முதலிய செவியறிவுடைய உயிர்ப் பொருள்களெல்லாம் தமக்கு இயற்கையானமைந்த ஒலிக்குறிப்பினால் தம்மினத்தோடு பேசுகின்றன.

அவ்வளவினன்றி எருமை, பசு, கன்று முதலியன தமக்கு இரையேனும் தண்ணீரேனும் வேண்டியபொழுது அக்கருத்தை மேய்ப்பான் அறியுமாறு அவற்றின் இயற்கையொலிக்குறிப்பால் 'மா' என்று அழைக்கின்றன. காவலை மேற்கொண்ட நாய்கள் வேற்றாள் வரக்கண்டால் அவர் அகன்று செல்லுமாறு தம் சினக்குறிப்பை ஒலிக்குறிப்பாற்காட்டி விரட்டுகின்றன. இவ்வொலிக்குறிப்புக்களெல்லாம் அவ்விலங்கினங்களுக்கு வேண்டிய அளவு தம் கருத்தை வெளியிடுவதற்கு இயற்கையானமைந்த பேச்சென்றே கொள்ளத்தகும்.

இவ்வியற்கைப் பேச்சுக்களெல்லாம் அவ்விலங்கினங்களால் உண்டாக்கிக் கொள்ளப்பட்டனவல்ல; அநாதியாயுள்ளன.

இவ்வுலக முழுதும் ஊழிக்காலத்தில் அழிந்து போய் மறுபடைப்புத் தொடங்கிய காலத்தில் அவை தோன்றுமாயின் தத்தமக்குரிய ஒலிக்குறிப்பாகிய பேச்சுக்களையே இயற்கையாய்ப் பேசுவனவாம். ஆகையால் அப்பேச்சுக்கள் அவற்றிற்கு என்று ஒருபடியேயுள்ளனவாம். அவ்வாறு மக்களுக்கும் தம்கருத்தைத் தம்மினத்துக்கு வெளிப்படுத்தற்குரிய இயற்கையான பாஷை ஒன்று வேண்டிய அளவில் அநாதியாயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

விலங்கினங்கள் செயற்கையறிவு பெறாது இயற்கையறிவொன்றேயுடையனவாதலால் அவற்றின் பாஷைகள் வேற்றுருவடையாதொரு படியாயிருக்கின்றன.

மக்களுக்கு இயற்கையறிவோடு செயற்கையறிவுமுண்மையால் இவர்களுக்குரிய இயற்கை மொழிகளெல்லாம் செயற்கையால் உருமாறிக் காலதேச வேறுபாட்டால் வெவ்வேறு பாஷைகளாகின்றன. அதனால் இவை இயற்கைமொழி என்றும் இவை செயற்கைமொழி என்றும் வேறு பிரித்தறிதல் மிகவும் அரிதாகிவிட்டது.

ஆயினும் ஒன்றையொன்றறியாத பல்வேறு பாஷைகளிலும் சொற்பொருள்களொற்றுமைப்பட்ட மொழிகளும், தாதுக்களுமியற்கைமொழியென்று கொள்ளத்தகும். அவை பெரும்பாலும் ஓரெழுத்தொருமொழியும் ஈரெழுத்தொரு மொழியுமாயுள்ள இயற்பெயர்களும், மரபுப் பெயர்களும், உரிச்சொற்களாகிய வினைப்பகுதிகளும், பண்புப் பகுதிகளும் பிறவுமாம்.

தொல்காப்பியனார் இயற்கைமொழிகளை 'ஓரெழுத்தொரு மொழி ஈரெழுத்தொருமொழி' என்ற சூத்திரத்தில் ஒருமொழியென்றுகூறிச் செயற்கைமொழிகளை 'இரண்டிறந்திசைக்குந் தொடர்மொழி' என்றார். இதனால் ஓரெழுத்தாலேனும் ஈரெழுத்தாலேனும் இயல்பான் அமையும் மொழிகளை ஒருமொழி என்றமையால் அவை இயற்கைமொழியென்றும், தொடர்மொழி என்றது ஒருமொழியோடு வேறுமொழி தொடர்ந்தனவே யாதலால் அவை மக்களிச்சையாற்

கூட்டிப்புணர்க்கும் செயற்கைமொழியென்றும் கொள்ளத்தகும்.

நன்னூலாரும் பெயர்களை மரபுபற்றியபெயரென்றும் ஆக்கம்பற்றிய பெயரென்றும் இருகூறுபடுப்பர். அவற்றுள் மரபுபற்றியபெயர்களை ஆக்கத்தின் வேறாகக் கூறினமையால் அம்மரபுப் பெயர்கள் மக்களால் ஆக்கிக்கொள்ளப்பட்டன வல்லவென்பதும், அவை தொன்றுதொட்டு ஒருபடியாக வழங்கப்பட்டுவரும் இயற்கைமொழி என்பதும் அவர்க்கு உடம்பாடாகும்.

இயற்கைமொழிகளே இயற்சொல் என்றும், செயற்கை மொழிகளே திரிசொல் என்றும் முற்காலத்து வழங்கப்பட்டுள்ளன. (அப்பெயர் பிற்காலத்து வேறுபொருள் பெற்றன.) ஆக்கப்படாது தொன்று தொட்டு வழங்கிவரும் மரபுப் பெயர்களுள் ஒருசில இடுகுறிப்பெயரும் வேறு சில காரணப்பெயரும் உண்டென்பர் நன்னூலார், மரபினுள், இடுகுறியென்றது காரணந்தோன்றாத பெயர்கள் என்றும், காரணக்குறியென்றது காரணங்கருதி மக்களால் ஆக்கப்படாது இயல்பானே காரணம் அமைந்து கிடக்கும் பெயர்கள் என்றும் கருதவேண்டும்.

இதுகாறுங்கூறியவாற்றாற் செவியறிவுடைய உயிர்ப்பொருள் களுக்கெல்லாம், இயற்கையொலிக்குறிப்பு அநாதியாயிருத்தலால் அம்முறையானே மக்களுக்கும், தமக்குரிய இயற்கையொலிக் குறிப்பால் தம் கருத்தை இனத்திற்கு உணர்த்தற்கு உரிய இயற்கைமொழி அநாதியாக மக்கள் தோன்றியகாலந்தொட்டு வழங்கப்பட்டிருக்கவேண்டுமென்பது பெறப்பட்டது.

இனி அவ்வியற்கைமொழி வெளிப்படும்காலமும் இடமும் ஆராய்வோம். மக்கள் தோன்றிய காலத்தே அவர்க்குரிய இயற்கைமொழியும் அவரிடம் வெளிப்படத் தொடங்குவது இயல்பாகும்; ஆயினும் உயிர்ப் பொருள்களுக்கு வேண்டும் இயற்கையுறுப்புக்களெல்லாம் அவர் பிறக்கும் பொழுதே உடன் தோன்றிவிட வேண்டுமென்ற நியமமில்லை. விலங்கினங் களுக்குக் கொம்புகள் நாளடைவில் வெளிவருகின்றன. மக்களுக்குப் பற்கள் நாளடைவில் தோன்றி அவை விழுந்து

பின்பு வேறுபற்களும் முளைக்கின்றன. அவ்வாறே இயற்கையான சொற்களும் நாளடைவில் தோன்றி அவை வீழ்ந்து பின் வேறு சொற்களும் தோன்றலாம். படைப்புக்காலத்திலும் சில புலப்படலாம்.

இவ்வுலகின் படைப்பைப்பற்றிப் பரிபாடல் பின்வருமாறு கூறுகிறது:-

"கருவளர்வானத்து இசையிற்றோன்றி
உருவறிவாரா ஒன்றன் ஊழியும்
முந்துவளி கிளர்ந்தவூழூழியும்
செந்தீச்சுடரியவூழியும் பனியொடு
தண்பெயல் தலைஇயவூழியுமவையிற்
றுண்முறை வெள்ளமூழ்கியார் தருபு
மீண்டும் பீடுயர் பீண்டியவற்றிற்கும்
உள்ளீடாகியவிரு நிலத்தூழியும்"

என்ற அடிகளால், இவ்வுலகு தோன்றுதற்குக் கருவாயுள்ள அணுக்கள் ஒலியுடன்கூடிய ஆகாயத்தில் ஒருழி காலம் வளர்ந்து கொண்டிருந்து பின்பு காற்று வடிவமாகி ஒருழி காலமிருந்ததென்றும், பின்பு அது தீத்திரளாகி மாறி ஒருழி காலமிருந்ததென்றும், பின்பு அது நீர்த்திரளாகி மாறி ஒருழி காலமிருந்ததென்றும், பின்பு அந்நீர்த்திரளினின்றும் இவ்வுலகு பார்த்திரளாய்த் தோன்றிற்றென்றும் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு உலகத் தோற்றமுரைக்கும் கொள்கையை ஆங்கிலகலா நிபுணர்களும் ஆதரிக்கின்றனர் என்று தெரிகின்றது.

இவ்வாறுதோன்றும் உலகினிடையே மக்கள்தோன்றிய இடம் யாதாயிருக்குமென் றாராய்வாம். புறப்பொருள் வெண்பா மாலையுள், 'குடி நிலை' யென்னும் வெட்சித் திணைத்துறைக்கு உதாரணங்காட்டிய செய்யுள் ஒன்றுள்ளது; அது.

'பொய்யகல நாளும் புகழ் விளைத்த வென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர் - கையகலக்
கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு
முற்றோன்றி மூத்த குடி" என்பதாம்.

இதன் பொருள்:- 'பொய்ம்மை நீங்க நாள்தோறும் கீர்த்தியையுண்டாக்குதல் என்ன அதிசயமாம்! பூமியை மறைத்துத் தெளிந்து கறங்கும் உகாந்தவெள்ளம் விட்டுநீங்க முற்பட மலைதோன்றிப் பூமி தோன்றாத அளவிலே வாளுடனே எல்லாரிலும் முற்பட மலையிடத்திலே தோன்றிப் பழையதாகியகுடி" என்பது.

இதனால் உகாந்த வெள்ளத்தில் பூமி முழுதும் முழுகிக்கிடந்து நெடுங்காலமான பிறகு சமதரையான நிலப்பரப்புத் தோன்றுவதற்கு முன்னே, அந்நிலப்பரப்புக்களினின்றும் மிகவும் உயர்ந்து விளங்கும் மலைகளே அந்நீர்ப்பரப்பின் மேலே தோன்றத் தொடங்குவன. அவ்வாறு தோன்றிய மலையிற் பிறந்த தமிழ்க்குடிகளே மற்ற மொழிபயிலும் குடிகளுக்கு முற்பட்டவர் என்று பெறப்படுகிறது.

அத்தகைய மலைகள் இமயமலைத் தொடரும் சையமலைத் தொடருமாம். இமயமலைச் சிகரப்பகுதிகள் நெடுங்காலம் பெருங்கடலில் மூழ்கிக் கிடந்திருக்கவேண்டுமென்று பிரத்தியக்ஷ சோதனையால், பூமி சோதனாசாஸ்திர நிபுணர்களும் அங்கீகரிக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆயினும் அது பனி மிகுதியால் உயிர்ப்பொருள் முதன்முதற்றோன்றி வளர்தற்குரிய இடந்தருதல் அரிதேயாம். பொதியம் என்னும் சையமலைத் தொடர் அத்துணை பனி மிகுதியின்மையால் உயிர்ப்பொருள் தோன்றி வளர்தற்குரியதே. ஆதலால் பெருங்கடலிடையே சையமலை தோன்றிய காலத்து அம்மலைத் தொடர்களில் மக்களுணவுக்குரிய காய் கனி கிழங்கு வகைகளையுதவும் தாவரவர்க்கங்களும், ஊர்வன பறப்பன நடப்பன நீர்வாழ்வனவாகிய விலங்கினங்களும் தோன்றிய துணையே, மக்களும் தோன்றியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அவர் அக்காலத்திற் பேசிய மொழிகளை ஆராய்தற்குரிய மிகப் பழமையான நூல்கள் இக்காலத்தில் ஒன்றுமில்லை. ஆயினும் இக்காலத்திலுள்ள தமிழ் நூல்களிலெல்லாம் மிகப் பழமை வாய்ந்தது தொல்காப்பியமொன்றே.

அதன்கண் தரை வாழ்க்கையறியாத மலை

வாழ்க்கையுடையவர்களாற் குறிசெய்து வழங்குதற்கு இன்றியமையாத மரப்பெயர்களும், படைப்புக்காலந்தொட்டு வழங்குதற்கு இன்றியமையாத மரபுப் பெயர்களும், திசைப்பெயர்களும், எண்ணுப் பெயர்களும், பிறவும் ஆராயப்பட்டுள்ளன. உயிர்ப் பொருட்பெயர் பலவும் மரபியலுள் ஆராயப்பட்டுள்ளன.

இவற்றுள் மரப் பெயர்ப்பொருள்கள் பெரும்பான்மையும் மலையகத்துள்ளனவே. அவை: - யா, பிடா, தளா, விளா, பலா, அணா, நுணா, ஒடு, சே, மா, விசை, ஞெமை, நமை, கடு, ஆண், அரை, இல்லம், விசை, எகின், ஆர், வெதிர், சார், பீர், பூல், வேல், குமிழ், வழை என்பனவும் பிறவுமாம்.

இம்மரப்பெயர்கள் அவ்வவ்வீற்றெழுத்துக்குரிய பொது விதிபெற்றுப்புணராது சிறப்பு விதி பெற்றுப்புணர்கின்றன. மிகவும் பழைய கால வழக்குக்கு இன்றியமையாத தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களும் திசைப் பெயர்களும் எண்ணுப் பெயர்களும் தத்தம் ஈற்றெழுத்துக்குரிய பொது விதியுளடங்காத சிறப்பு விதிபெற்றுப் புணர்கின்றன. அவ்வாறு சிறப்புவிதி பெற்றுப் புணரும் மரப்பெயர்களும் படைப்புக் காலச் சொற்களென்றறியத்தகும். அச்சொற்பொருள் பலவும் மலையகத் திருத்தலால் அச்சொற்கள் பிறந்த இடம் மலையகமாமென்பது தொருதலை. இக்கருத்துட்கொண்டு தமிழ்மொழி வணக்கம் கூறிய ஒரு புலவர் பெருந்தகை, தமிழ்த் தெய்வத்துக்குப் பிறப்பிடம் பொருப்பு என்பது புலப்பட -

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரென
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள்"

என்று தமிழ்மொழியின் சரித்திர முரைத்திருக்கிறார். அணியிலக்கண முரைத்த தண்டியாசிரியரும்,

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திடர்கடியும் - ஆங்கவற்றுள்

பின்னோர் தனியாழி வெங்கதிரோன் ஏனையது
தன்னே ரிலாத தமிழ்"

என்றார். இதனாலும் தமிழ் ஓங்கலிடை (மலையகத்தே) தோன்றியதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழ் மொழிகளுள் ஒரு சில மரபு பற்றிவருவனவென்றும், வேறு சில ஆக்கம் பற்றிவருவனவென்றும் முன்னமே சொல்லப்பட்டன. ஆக்கம் பற்றிய சொற்களெல்லாம் மக்களாலாக்கிக்கொள்ளப்பட்டனவாதலால் அவற்றின் வேறாயுள்ளனவெல்லாம் மக்களாலாக்கப்படாமல் இயல்பானே அமைந்தனவாம். இயல்பானமைந்தமையால் அவையியற் சொல்லென்று வழங்கப்படுகின்றன. இயற்சொல்லுள்ளும் காரணம் பற்றிய மொழிகள் பல காணப்படுகின்றன. அவை அக்காரணங்களையறிந்த மக்களாலாக்கிக் கொள்ளப்பெறாமல் இயல்பானே அமைந்திருத்தல் எவ்வாறு பொருந்தும்? என்று வினவுதல் கூடும்.

இயற்கைப் பொருள்களுள்ளும் காரணம் பற்றிச் சிற்பிகளால் ஆக்கப் பட்டனபோலவே உயிர்ப்பொருள்களின் வடிவங்கள் தோன்றுகின்றன. என்பு தசை நரம்பு குடல் முதலிய உறுப்புக்கள் அவ்வடிவங்களுக்குக் காரணம்போல் இயல்பானே அமைந்து கிடக்கின்றன. இவ்வாறு சொற்களுள்ளும் காரண உறுப்புக்கள் இயற்கையானமைந்துள்ளன. அவற்றை விளக்க வேண்டி ஒரு சில இயற்பெயர்களை ஆராய்ந்து காட்டுவன்.

தமிழ் மக்கள் மலை வாழ்க்கையிலுள்ள காலத்தில் தம்மைப்போல் இடம்விட்டுப் பெயர்ந்து இரை தேடியுண்டு உயிர்வாழ்வனவாகிய ஊர்வன, பறப்பன, நீர்வாழ்வன முதலிய உயிர்ப் பொருள்களையும் கல் மண் நீர் தீ காற்று கரி விறகு முதலிய உயிரில்லாப் பொருள்களையும் அறிந்தவர்களாய் உயிரில்லாத பொருள்களினின்றும் உயிருடைய பொருளை வேறு பிரித்து வழங்கவேண்டிய அமயத்தில் அவ்வுயிருடைய பொருள்களுக்கெல்லாம் பொதுவாக ஒரு பெயர் தோன்றத் தலைப்பட்டது. அப்பெயர்தான் எளிதாகிய இதழ் முயற்சியால்

பிறக்கும் ஓரெழுத்தொருமொழியாகிய 'மா' என்பதாம்.

இந்த 'மா' என்னும் பெயராலே மக்களையும் மற்றுமுள்ள விலங்கினங்களையும் வழங்குவாராயினர். மக்களையும் மா என்னும் பெயரால் முன்பு வழங்கினர் என்பதைப் பால்பகுத்து வழங்கிய பிற்காலத்தார் பன்மைக்குரிய கள்விகுதி கொடுத்து, 'தவத்துறை மாக்கள்' என வழங்குதலால் அறியலாம். விலங்கினங்களையும் அப்பெயரால் வழங்குதலைப் பாய் மா பரிமா அரிமா முதலிய சொல்வழக்கால் அறியலாம்.

பின்பு அந்த மா என்னும் பெயரே விலங்கினங்களினின்றும் மக்களைப் பிரித்துணர்த்தவேண்டி ம என்னும் பெயராய்க் குறுகிநின்று வழங்கப்பட்டது. இதனைப் பின்பு திணை பால் பகுத்துணர்த்துங்காலத்தில் மக்கள் எனக் கள்விகுதி கொடுத்து வழங்குதலால் அறியலாம்.

இவ்வாறு மக்களைப் பிரித்துணர்த்த வேண்டி ம எனக் குறுகிநின்ற பெயரே அம்மக்களுட் சிறந்த (உயிர்ப்பொருளாகிய) தலைவனையுணர்த்த வேண்டி நகரவொற்றடுத்து, ம(ந்)ன் என்ற பெயராய் வழங்கப்பட்டது. இது பின்பு பாற்பகுப்புக் காலத்தில் ம(ந்ந)ன்னன், மன்னவன் மன்னவர் மன்னர்கள் முதலிய சொற்களாகத் திரிந்தது.

இன்னும் அந்த ம(ந்) என்னும் பெயரே உகரம்பெற்று ம(ன்)நு என நின்று மன்னரிற் சிறந்தோனை யுணர்த்திக்கொண்டு மானவர், மானுடர், மானிடர், மாந்தர், மனிசர், மனிதர் என மக்கட்பெயர் பலவற்றிற்கு மூலமுமாயிற்று.

இன்னும் ம என்னும் மக்களையுணர்த்தும் பெயரே ககர உயிர்மெய்யடுத்தும், அதன்மேல் உகரச்சாரியை பெற்றும் முறையே மக மகவு எனக் குழவியையுணர்த்தும் இருதிணைப் பொதுப் பெயருமாயிற்று.

பின்பு மக என்னும் அப்பெயர்தானே திணை பால் பகுப்புத்தோன்ற னளர வீறுபெற்றுழி மகன், மகள், மகார் என உயர்திணைப் பெயராய்ப் பின்பு முறைப்பெயரும் ஆயின.

அவற்றுள், மகள் என்பது, மகளூ எனப் பிறமொழியிலும், (மகடு) மகடூஉ எனத் தமிழ்மொழியிலும் திரிந்து உயர்திணைப் பெண்பாற்பெயரும் முறைப்பெயருமாயிற்று.

இன்னும் மா என்னும் பெயரே மகரவொற்றொழிய ஆ என நின்று, ணகரவொற்றடுத்து ஆண் என இருதிணைப் பொதுப்பெயராயிற்று.

அப்பொதுப் பெயரான ஆண் என்னும் சொல்லே உயர்திணைச் சிறப்புணர்த்த வேண்டி ணகரம் ளகரமாய்த் திரிந்து ஆள் எனவும், அது திரிந்து (ஆட் ஆடு) ஆடூஉ ஆடவர் எனவும் உயர் திணையாண்பாற் பெயராயிற்று.

இன்னும் மா என்னும் பெயரே முதலில் அகரத்தால் தொடரப் பெற்று ஒற்றிரட்டித்து அம்மா எனத் தாயையுணர்த்தும் முறைப் பொதுப்பெயராயிற்று. அது பின் வலிந்துநின்று அம்பா எனவும் தாயையுணர்த்தும் பெயராயிற்று.

இன்னும் அந்த அம்மா அம்பா என்னும் இரண்டு பெயர்களும் ஆ வீறு ஐயாகத் திரிந்து அம்மை அம்பை எனத் தாயையுணர்த்தும் முறைப்பெயராய் வழங்கப்பட்டன. இவை விளியில் அம்மே, அம்மா, அம்பா எனவும் திரிந்தன.

அம்மை என்ற பெயர் பின் மகாரம் போலித்திரிவால் அன்னை அந்நை அஞ்ஞை, அய்யை என வேறுபட்டுத் தாயையுணர்த்தும் முறைப்பெயராயிற்று. அந்நையை அஞ்ஞை என்னும் வழக்கு இன்னும் அஞ்ஞாப் பள்ளரிடம் காணலாம்.

இன்னும் அம்மா என்ற பெயரே போலித்திரிவால் அன்னா அந்நா அஞ்ஞா அய்யா என்றாய் அத் தாயோடொத்த தந்தைக்கப் பெயராயிற்று.

இன்னும் அம்மா என்னும் பெயரே போலித்திரிவால் அண்ணா அண்ணா என்று நின்று தன்னையையுணர்த்தும் முறைப் பெயராயிற்று. அம்மா, அப்பா, அய்யா, அண்ணா முதலிய ஆகாரவீற்றுப் பெயர்கள் ஆதிகாலத்தில் எழுவாய்ப் பெயராயிருந்தன. அவை எழுவாய்ப் பெயராயிருந்தமை

யாலன்றே இக்காலத்தும் அவை அம்மாவை யழை; அப்பா வோடுண்பேன் என்பனபோல் வேற்றுமையுருபேற்று வழங்கப்பெறுகின்றன. அங்ஙனமன்றி விளிப்பெயராயே யிருக்குமாயின் வேற்றுமையுருபேற்று வழங்குமாறின்று. பாற்பகுப்புத் தோன்றியகாலத்தில் அய்யா அய்யன் ஐயன் என்றும், அப்பா அப்பன் என்றும் அண்ணா அண்ணன் என்றும் அம்மா, அம்மன், அம்மனை, அம்மணி, அம்மாள் என்றும் ஏற்றபெற்றி திரிந்தன. இவ்வாறு திரிந்த அய்யன், அப்பன், அண்ணன், அம்மாள் என்ற பெயர்கள் பின் விளியுருபேற்குங்கால் எழுவாய்ப் பெயரின் வேறான விளிப்பெயரும் அய்யா, அப்பா, அண்ணா, அம்மா எனப் பழைய எழுவாய்ப்பெயர் போற்றோன்றின.

இன்னும் அந்த மா என்னும் பெயரே இரட்டித்து, மாமா என்னும் முறைப்பெயராயிற்று. இது பின் பால்பகுக்குங்காலத்தில் அன்பெற்று மாமன் ஆயிற்று. இதனடியாக விளியில் ஒரு மாமாவும் எழுவாயில் ஒரு மாமியும் தோன்றின.

மக்கட் பொதுமையுணர்த்தும் ம என்னும் பெயரே ககரவொற்றடுத்து 'மக்' என நின்று உயிர்க்குணமாகிய மகிழ்ச்சியையுணர்த்த னகர வீறு பெற்றுழி மகிழ்தற்குரியோன் என்னும் பொருளில் மகன் என்று கணவனையும், ளகரவீறு பெற்றுழி மகிழ்தற்குரியாள் என்னும் பொருளில் மகள் என்று மனைவியையும் உணர்த்தும் வேறொரு முறைப்பெயருமாயிற்று. இப்பொருண்மையைக் கணவனுக்கு மகிழ்நன் என்ற பெயருண்மையால் அறியலாம்.

இனி விலங்கினங்களையுணர்த்தும் மா என்னும் பெயரால் அவ்விலங்கினங்களோடொத்து அறிவு குன்றிய முழுமக்களும் வழங்கப்பட்டனர். இதனை, 'மாவும் மாக்களும்' என்ற தொல்காப்பியச் சூத்திரம் வெளியிடும்.

இன்னும் மா என்னும் பெயரே, முதனின்ற மகரமெய் கெட்டு ஆ என்று நின்று விலங்கின் சிறப்புணர நின்றது. அதுதானே னகர வொற்றடுத்து ஆன் என நின்று யாடும், எருமையும், பசுவுமாகிய மூவினப் பெயராயிற்று.

இன்னும் மா என்னும் பெயரே டகரவொற்றடுத்து 'மாட்' என நின்று பசுவும் எருமையுமாகிய ஈரினப் பெயராயிற்று. அந்த மாட் என்பதுதானே முதன் மெய்யாகிய மகரங்கெட்டு ஆட் என நின்று அவற்றுள் ஓரினமாகிய ஆட்டுக்குப் பெயராயிற்று; டகரவொற்றீற்றுப் பெயராகிய மாட், ஆட் இரண்டும் உகரம் பெற்றுப் பின் மாடு, ஆடு என வழங்கப்பட்டன. இவற்றுள் ஆடு என்னும் பெயர் முதலில் யகரமெய் பெற்று யாடு என்றும் வழங்கப்பட்டது.

ஆதிகாலத்தில் வல்லொற்றிறுதிப் பெயர்களாயிருந்தவை யெல்லாம் பிற்காலத்தில் உகரம் பெற்றுக் குற்றியலுகர வீறாயின. அவை முன்னர் ஒற்றீறாயிருந்தமையாலன்றோ கல், முள் முதலிய ஒற்றீற்று மொழிகள் உகரம் பெற்றுழிக் கல்லு முள்ளு என்று உயிரீறாயிருந்தும் வருமொழி முதலுயிரேறி முடிய இடங்கொடுப்பது போலக் குற்றுகரவீறும் உயிரேறி முடிதற்கு இடங்கொடுக்கின்றன. அவை உண்மையின் உகரவீறன்மையால் தொல்காப்பியனார் குற்றுகரப்புணர்ச்சியை உயிரீற்றுப் புணரியலின் வேறாக வைத்தோதினார். ஆதிகாலத்தில் வல்லெழுத்து மெய்களும் மொழிக்கிறுதியாக வழங்கப்பட்டன. உகரவீறாகிய பிற்காலத்தில் மொழி முதலெழுத்துக்க ளிவையென்றும், ஈற்றெழுத்துக்க ளிவையென்றும் நியமிக்கப்பட்டன.

இவ்வாறாக உயிர்ப் பொருளுணர்த்தும் மா என்னும் பொதுப் பெயரொன்றே அவ்வுயிர் வேறுபாடுபற்றி அவற்றின் பொருட்பெயர்களாயும், முறைப்பெயர்களாயும் வேறுபட்டு அவ்வுயிர்ப் பொருள்களையே யுணர்த்துகின்றது.

இம்மட்டிலமையாது மூவிடப் பெயர்களிலும் அம்மகரமெய் சென்று நின்று உயிர்ப்பொருள்களை யுணர்த்துகின்றது. மூவிடப்பெயர் முற்காலத்தில் ஒருமைக்கும் பன்மைக்கும் வேறுபாடின்றி இரண்டிற்கும் பொதுவாகத் தன்மையில் நம் என்றும், முன்னிலையில் நும் என்றும், படர்க்கையில் தம் என்றும் மாவின் மகரவொற்று நிற்கத் திரிபடைந்து உயிர்ப் பொருளேயுணர்த்தின.

இம் மூவிடப் பெயர்கள் ஒருமை பன்மையிரண்டற்கும் பொதுவாக வழங்கப்பட்டனவென்பதைத் தனக்குரியர் எனக்குரியர் உனக்குரியர் என்னும் பொருளிலும், தமர், நுமர் என்றே வருதலாலும், தனர், எனர், நுனர் என மூவிடத்தும் ஒருமைப் பொருள்பற்றித் தனியே வழங்கப்படாமையாலும் அறியலாம். என்னவன் நின்னவன் என்றும் "நினவ கூறுவல் எனவகேண்மதி" என்றும் ஒருமையிற் பிரித்து வழங்குதல் பிற்கால வழக்கென்க.

அவற்றுள் நம் என்னும் தன்மைப் பெயர் போலிவகையால் நம் (ஞம், யம்) எம் என்று திரிந்து அப்பொருளுணர்த்திற்று. வேற்றுமை அல்வழி பகுக்குங்காலத்தில் அல்வழியில் நாம் என நீண்டது. யம் எம் இரண்டும் யாம் என அல்வழியிற் றிரிந்தன. நும் என்பது நிம், நீம், நீங்கள், நீமிர், நீவிர், நீயிர், நீர் ஆயிற்று.

ஒருமை பகுக்குங்காலத்தில் தாம் தான் ஆயிற்று. யாம் யான் ஆயிற்று. அது ஞான் வாயிலாக நான் ஆயிற்று நீர், நீ யாயிற்று. இத்திரிபினுள் 'நீயிர் நீவிர் நான் எழுவாயலபெறா' என்ற நன்னூலார்க்கு நீர் என்பதன் திரிவு நீயிர் நீவிர் என்பனவும் யான் என்பதன் திரிபு நான் என்பதும் உடம்பாடென்றறியலாம்.

தொல்காப்பியனாரும் இவ்வாறான திரிபை யுட்கொண்டனர் என்பதை 'நும்மின் றிரிபெயர்' என்ற அவர் கருத்தையுற்று நோக்கியுணர்க. பிற்கால வழக்கில் இத்திரிபுகளை இலக்கண நூலார் உலக வழக்கை நோக்கியும் இயற்கை மொழியின் செலவைப் பின்பற்றியும் மூவிடப் பெயர்களென்றும் அவை நெடுமுதல் குறுகி வேற்றுமையில் திரியுமென்றும் இலக்கணங் கூறினார்கள்.

இதுகாறுங் கூறியவாற்றால் உயிர்ப்பொருளுணர்த்த வந்த மா என்னும் ஒருபெயரே அவ்வுயிர்ப் பொருட்டிரிவு பலவற்றுள்ளும் உடன் திரிந்து வேறுபட்டு உயிர்ப்பொருளின் வேறுபாடு தோன்ற வழங்கப்பட்டதென்று நிரூபிக்கப்பட்டது.

அநாதியென்று சொல்லப்பட்ட வேதமந்திரங்களிலுள்ள மகாரம்

ஜீவவாசகமென்று வியாக்கியானங்களில் எழுதப் பட்டிருக்கிறது. அது 'மந்' என்ற தாதுவடியாக உணர்வுடைப் பொருளையுணர்த்தும் பெயராயிற்றென்று விளக்கியிருக் கிறார்கள். ஆதலால் இவ் வியற்பெயர்களெல்லாம் காரணங்கருதி ஒருவரால் ஆக்கப்படாமல் காரண முடையனவாகவே இயற்கையானமைந்திருத்தல் கவனிக்கத்தக்கதே. இதனால் வடமொழியிலுள்ள 'மந்' என்கிற தாது அடியாக மேற்காட்டி மா முதலான பெயர்கள் பிறந்தனவாகக் கருதுதல் கூடாது. வடமொழித் தாதுவும் மா முதலிய சொற்களின் பகுதியும் ஒன்றாயிருக்கிறதென்றே கொள்ளவேண்டும்.

இன்னும் குட் என்னும் ஒரு தாது வடமொழியுள் வளைதற்பொருளுணர்த்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குட் என்னும் அவ்வொலியடியாக வடமொழிவாணரறியாத தமிழ்ச்சொற்கள் மிகப் பல அமைந்து கிடக்கின்றன. அவை:- குடில், குடி, குடிசை, குடை, கூடை, குடுக்கை, குலுக்கை, கொடி, கோடு, (சங்கு) கோடு, (குளக்கரை) கோடு, (மரக்கொம்பு) கோடு, (விலங்கின் கொம்பு) கோடு, (மலை) கோட்டம், கோட்டை, கோண், கோணல், குளம், குட்டை, குழி, குழல், குடல், குடக்கு, குணக்கு, குடந்தம், கொடுக்கு, கொக்கு, கொக்கி முதலியனவாம். இவையெல்லாம் அவ்வடமொழித் தாதுவைக்கொண்டு ஆக்கப்பட்டனவா? இயல்பானமைந்தனவா? என்று ஆராயத்தக்கன.

தமிழரும் வடமொழிவாணரும் ஒருவரையொருவரறியாத நிலையில் அவ் விருதிறத்தாரும் வழங்கும் சொற்கள் ஒரு படிப்பட்டிருக்குமாயின் அச்சொற்கள் இயற்கையானமைந்தன வென்றே கொள்ளவேண்டும். அல்லது அவ்விருதிறத்தாரும் ஆதியில் ஒருநாட்டாராயிருந்து பின்பு பிரிந்து பாஷை வேறுபட்டவரானாரென்று கொள்ளவேண்டும். இக்கருத்துக்கு "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்" என்பது பொருந்துகின்றது.

(தொடரும்)

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர். இரா.சதாசிவம்
பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆2341116